மின்னிதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com

Smart Fly

ARUN WINGS TRAVELS & TOURS

கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு

விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்

ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd

143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680

arunwingslanka@gmail.com

மலர்: 02 | குரல்: 143 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 29.01.2024 | பக்கங்கள் 12



# தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு: கூட்ட முடிவுகள் அந்தரத்தில்!



பக்கம்–04

## விடயத்தைத் தள்ளிப்போட மாவை, சிறீதரன் முடிவு!

# ரணிலின் தவறான கோரிக்கைக்கு ஒத்துழைக்க முடியாது!

## சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவிப்பு!



பக்கம்–09



பக்கம்–02

## தமிழர்களுக்கு நிரந்தரமான, உறுதியான தலைமை அற்று இருக்கின்றோம்!

கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு!

## கிழக்குப் பல்கலையில் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல்!



பக்கம்–08

## மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலையின் 37 ஆவது நினைவேந்தல்!



பக்கம்–04

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

# தமிழர்களுக்கு என்று ஒரு நிரந்தரமான, உறுதியான தலைமை அற்ற நிலைமையில் இருக்கின்றோம்!

## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு!



தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் சிதைந்து சின்னாபின்னமாகி இன்று தமிழர்களுக்கு என்று ஒரு நிரந்தரமான, உறுதியான தலைமை அற்ற நிலைமையில் இருக்கின்றோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சி இன்று ஒரு மோசமான நிலையில் இருக்கின்றது தமிழ் மக்களின் நிலையினை கருத்தில் கொண்டு இவர்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். ஒற்றுமையாக செயல்படுவது மாத்திரமல்ல அவர்களது கட்சிக்குள்ளே தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் இவர்கள் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலையின் 37 வது ஆண்டு நினைவு தினம் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வருடா வருடம் இந்த பகுதியிலே மரணித்தவர்களுக்காக நாங்கள் அஞ்சலி செலுத்துவது வளமை ஆனால் ஒரு வருடம் அஞ்சலி செலுத்துவதற்கு பாதுகாப்பு படையின் அச்சுறுத்தல் தடைகள் இருக்காது சில நேரங்களில் தடைகள் காணப்படும் குறிப்பாக 2022 ஆம் ஆண்டு பெரியதொரு தடை இருந்தது அனைவருக்கும் நீதிமன்ற கட்டளைகள் வழங்கப்பட்டது இங்கே எதுவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாது என்று.

அந்த வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு அதையும் மீறி நான் அஞ்சலி செலுத்தியிருந்தேன் ஆனாலும் எனக்கு நீதிமன்ற கட்டளை வழங்கப்படவில்லை நீதிமன்ற கட்டளைகள் வழங்கப்பட்டவர்கள் இங்கு அஞ்சலி செலுத்த வரவில்லை எனக்கு நீதிமன்ற கட்டளை வழங்காததன் நிமித்தம் நான் அஞ்சலி செலுத்தியிருந்தேன். இருந்தும் எனக்கு எதிராக கொக்கட்டிச்சோலை போலீசார் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள் எதிர்வரும் 31 ஆம் தேதி அந்த வழக்குக்கான ஆரம்பம் நடைபெற இருக்கின்றது மட்டக்களப்பு நீதிமன்றத்தில் அதனை எதிர்கொள்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இந்த அரசாங்கம் ஒன்றை நினைத்துக் கொள்ள வேண்டும் வடக்கிழக்கிலே பல ஆயிரக்கணக்கான போராளிகள் இலட்சக்கணக்கான பொதுமக்கள் இந்த போராட்டத்தின் மூலமாக கொல்லப்பட்டிருக்கின்றார்கள் நாங்கள் அவர்களை எந்த காலத்திலும் மறக்க முடியாது நாங்கள் எங்களது எதிர்கால சந்ததியினருக்கு இந்த வடுக்களை கொண்டு செல்வதற்காகவே இந்த நினைவஞ்சலிகளை ஒவ்வொரு வருடமும் எங்கெங்கு மக்கள் படுகொலை செய்யப்பட்டார்களோ அங்கெல்லாம் நாங்கள் செய்து கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் எங்களது தலைமுறை இல்லாவிட்டாலும் எதிர்வரும் தலைமுறையாவது இவைகளை நினைத்துப் பார்க்க வேண்டும் நினைத்துப் பார்ப்பதன் மூலமாக எங்களுக்கு எதிராக இடம் பெற்ற அநியாயங்கள், அட்டூழியங்கள், அடக்குமுறைகள், படுகொலைகள் ஞாபகத்தில் அவைகளை வைத்துக் கொண்டு தமிழர்கள் அனைவரும் ஒன்று இணைந்து எமது மக்களின் விடுதலையை வேண்டி போராடினோமோ அந்த விடுதலை கிடைப்பதற்காக தொடர்ச்சியாக நாங்கள் போராட வேண்டிய ஒரு நிலையில் இருக்கின்றோம்.

உண்மையில் 2009 ஆம் ஆண்டு எங்களுடைய ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது 2009 வரைக்கும் தமிழ் தேசிய இனம் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்கின்ற அரசியல் சக்தியின் ஊடாக எமது ஒற்றுமையை இந்த நாட்டிற்கு மாத்திரமல்ல சர்வதேசத்திற்கு கூட வலுப்படுத்தி இருந்தோம் அந்த காலகட்டங்களிலே 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற பாராளுமன்ற தேர்தலில் 22 பாராளுமன்ற உறுப்பினர்களை வடகிழக்கில் இருந்து தமிழ் மக்கள் தங்களுடைய ஒற்றுமையை வாக்கு உரிமைகள் மூலமாக நிரூபித்திருந்தார்கள் ஆனால் 2009 பிற்பாடு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு தமிழீல விடுதலை புலிகள் இயங்கு நிலை அற்றதன் பிற்பாடு இன்று வரை எங்களுடைய தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் சிதைந்து சின்னாபின்னமாகி இன்று தமிழர்களுக்கு என்று ஒரு நிரந்தரமான, உறுதியான தலைமை அற்ற நிலைமையில் இருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அன்று உருவாக்கப்பட்டது தமிழ் மக்களின் அரசியல் சக்தியை வெளி உலகிற்கு கொண்டு வருவதற்கும் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை பேசி தீர்ப்பதற்குமாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிரிவடைந்து இருக்கின்றது.

தொடர்ச்சி 03 பக்கம்

# தமிழர்களுக்கு என்று ஒரு நிரந்தரமான, உறுதியான தலைமை அற்ற நிலைமையில் இருக்கின்றோம்!

## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்கின்ற ரீதியிலே நாங்கள் ஐந்து கட்சிகள் இருக்கின்றோம் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே பெரிய கட்சியாக கடந்த காலங்களிலே இருந்து கொண்டு வந்த இலங்கை தமிழரசு கட்சி இன்று ஒரு மோசமான நிலையில் இருக்கின்றது தமிழ் மக்களின் நிலையினை கருத்தில் கொண்டு இவர்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் ஒற்றுமையாக செயல்படுவது மாத்திரமல்ல அவர்களது கட்சிக்குள்ளே தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் இவர்கள் பலப்படுத்த வேண்டும்.

2009 க்கு பின்னர் சிங்கள பெரும் தேசியவாதம் தமிழ் தேசியக் கட்சிகளை பிரித்தாலும் தந்திரத்தைக் கொண்டு பிரித்து எங்களுக்குள்ளே பிரித்து கையாள்வதற்கு முயற்சிக்கின்றார்கள் அதற்காக ஒன்று இரண்டு முகவர்கள் கூட தமிழ் தேசியத்துக்குள்ளே வந்திருப்பதாக தான் நாங்கள் அறிகின்றோம் ஏனென்றால் சிங்கள பெரும் தேசிய வாதம் என்ன நினைத்ததோ அதை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு இடம்பெற இருந்த உள்ளூராட்சி தேர்தலில் பலவீனம் அடைந்தது இன்று தமிழரசு கட்சி கூட ஏனையவர்கள் கூறும் அளவிற்கு அவர்களது நடவடிக்கைகள் இருக்கின்றது.

அதை விடுத்து நாங்கள் ஒற்றுமையாக தமிழ் மக்களது உரிமைகளை பெறுவதற்காக பதவி ஆசைகள் தங்களது கட்சிகளை தாங்களே தலைமை தாங்க வேண்டும் என்கின்ற அந்த ஆசைகளை விடுத்து உண்மையிலேயே விடுதலை போராட்டத்திற்கு சென்ற இளைஞர்கள் நான் உட்பட இந்த பதவிகளுக்காக சென்றவர்கள் அல்ல நான் உயிருடன் இருந்தாலும் என்னைப் போன்று எத்தனையோ போராளிகள் இந்த வடகிழக்கிலே போராட்டத்திற்காக மரணித்திருக்கின்றார்கள் அவர்களின் ஆசை நிறைவேற வேண்டும் அவர்களது ஆத்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என்றால் நாங்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் அந்த ஒற்றுமையினை ஒவ்வொரு கட்சியும் நிலை நிறுத்த வேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட ஒன்றாக இருக்க வேண்டும்.

இன்று நாடு பொருளாதார ரீதியாக மிகவும் அதள பாதாளத்தில் இருக்கின்றது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்றார் இந்த வருட இறுதியிலே ஜனாதிபதி தேர்தல் வர இருக்கின்றது ஜனாதிபதி கூட இந்த நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்றேன் என்று சொல்லிக்கொண்டு அரசியல் நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றார் வடகிழக்கிலே ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் இருக்கின்றது அத்தனை பிரச்சினைகளையும் நான் தீர்க்கின்றேன் என்று கூறுகின்றாரே தவிர எந்த ஒரு பிரச்சனையும் தீர்வதாக தெரியவில்லை.

ஐக்கியமாக அனைத்து கட்சிகளும் இலங்கையிலே செயற்பட வேண்டும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்துபணத்தைப் பெற்று இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்கின்ற ரீதியில் அவர் செயல்படுகின்றார் அதே நேரத்தில் இலங்கையில் ஒவ்வொரு குடிமகனுக்கும் எதிரான சட்டங்களை 79 ஆம் ஆண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை தமிழர்களுக்கு எதிராக கொண்டு வந்தார்கள் இன்று நிகழ்நிலை காப்புச் சட்டத்தை ஒட்டுமொத்த மக்களது குரல்வளையை, குரலை நசுக்குவதற்காகவும் ஊடகங்களை அடக்குவதற்காகவும் தனக்குத் தேவையான சட்டங்களை அவர் கொண்டு வருகின்றார் அதே நேரத்தில் மறுபக்கம் அனைத்து அரசியல் கட்சிகளும் தன்னுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்கின்றார்.

இதை எல்லாவற்றையும் பார்க்கின்ற போது எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் வெல்வதற்கான ஒரு சூழ்ச்சியை, தந்திரத்தை தான் செய்து கொண்டிருக்கின்றாரே தவிர இந்த நாட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அல்லது வடகிழக்கிலே புரையோடிப் போய் உள்ள இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அல்லது மயிலத்தமடு மாதவனை போன்ற தமிழ் மக்களது காணிகளை அபகரிக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இவர் நினைக்கின்றார் இல்லை.

உண்மையிலேயே நாங்கள் இதேபோன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் உயிரிழந்தவர்களை என்றும் நாங்கள் தொடர்ச்சியாக நினைவில் வைத்துக் கொண்டு அவர்களுக்கான நினைவேந்தலை நாங்கள் செய்து கொண்டு இருக்கின்றோம் ஏனென்றால் வடகிழக்கு மக்களுக்கான ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை நாங்கள் இதனை ஒற்றுமையாக செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. என்கிறார்..



# தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு: கூட்ட முடிவுகள் அந்தரத்தில்!

## விடயத்தைத் தள்ளிப்போட மாவை, சிறீதரன் முடிவு!





திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவுகளை அப்படியே அந்தரத்தில் பேணவும், இறுதித் தீர்மானங்களை எடுப்பதைத் தள்ளிப் போடவும் நேற்று மதியம் மாவை சேனாதிராஜா வின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது என்று கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோருடன் கலந்துகொண்டிருந்த சுமந்திரன் எம்.பி. இந்த விவகாரத்தில் இணக்கப் பாடு ஒன்றும் எட்டப்படாத நிலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியேறினார் என்றும் தெரிகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை தாம் இன்னுமே ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், கட்சித் தலைவ ராக மாவை சேனாதிராஜாவே தொடர்கின்றார் என்றும் சிறீதரன் தெரிவித்தார்.

இரண்டு தரப்புகளுக்கு இடையிலும் கொதிநிலை நிலவுகின்றது. "வெட்டு ஒன்று துண்டு இரண்டாக முடிவு எடுக்க முடியாத நிலைமை உள்ளது. எல்லோரையும் சமாளித்து, அரவணைத்து, ஓர் இணக்கமான முடிவைக் காண வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு நான் நேரடியாகப் பேசவிருக்கின்றேன். அதற்காக சற்றுக் காலம் இந்த விடயத்தில் முடிவெடுப்பதைத் தள்ளிப் போடத் தீர்மானித்துள்ளோம்.

பொதுச்செயலாளர் பதவி விடயத்தில்தான் இழுபறி நீடிக்கின்றது. அதுவும் திருகோணமலை - மட்டக் களப்புத் தரப்புகளுக்கு இடையிலான சிக்கலாக உள் ளது. இருதரப்புகளும் விட்டுக் கொடுத்து, பொதுச் செயலாளர் பதவியைக் கால அளவீட்டில் பங்கிட்டு, ஏதேனும் இணக்கத்திற்கு வர முடியுமா என்றும் பார்க்கின்றோம்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எங்களுக்குச் சற்று கால அவகாசம் தேவைப்படுகின்றது. மாவை சேனாதிராஜா அடுத்து வரும் நாள்களில் சிங்கப்பூர் செல்கின்றார். அவர் பெப்ரவரி 10ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்புவார். அதன் பின்னர் இப்பிரச் சினை பற்றி ஆராய்ந்து ஒரு முடிவெடுப்போம். அதுவரை தற்போது உள்ள நிலைமை அப்படியே தொடரும். - என்று சிறீதரன் எம்.பி. மேலும் கூறினார்.

# மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை படுகொலையின் 37 ஆவது நினைவேந்தல்!

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் மகிழடித்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வானது நேற்று (28.01.2024) தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி உறுப்பினர் களால் மேற்கொள்ளப்பட்டது.
கடந்த 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை சுற்றிவ ளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த அப்பாவி பொதுமக்கள் 152 பேரை கைது செய்து துப்பாக்கி யால் சுட்டுப் படுகொலை செய்தனர்.
இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்டதன் 37 ஆவது நினைவு தினத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வெல்லாவெளி அமைப் பாளர் குமாரசிங்கம் தலைமையில் கட்சி உறுப் பினர்கள் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய நினைவு தூபியில் சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.



# என்னைத் தீர்மானித்தது இந்தியா அல்ல! யாருடனும் இணையத் தயார் - சிறீதரன் அறிவிப்பு!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ விவகாரத்தில் இந்தியா தலையிடவில்லை என தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு யார் வந்தாலும் அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படும் நிலைப்பாட்டில் தான் இந்தியா இருக்கின்றது. இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்கு என்றும் உறுதியானது.

ஜனநாயக ரீதியில் உள்ளக மட்டத்தில் தேர்தல் இடம்பெற்றது. கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். எனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

நண்பர் எம்.ஏ.சுமந்திரன் எதிர்மறையானவரல்ல. இயல்பானவர். எனது செயற்பாடுகளுக்கும், அவர் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு பூரணமாக உள்ளது.

கட்சியின் செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாக உள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தவும் விலகிச் சென்ற சிரேஷ்ட தலைவர்களை ஒன்றிணைக்கவும் அனைவரது ஒத்துழைப்புடனும் நடவடிக்கைகளை முன்னெடுக்க தீவிர கரிசனை கொண்டுள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மில்லியன் ரூபாவில் பண்ணை அமைத்துக் கொடுத்த சுவிஸ் தம்பதிகள்!

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வித்தற்பளை கெற்பேலி கிராமத்தில் வாழ்வாதார தேவையுடைய குடும்பம் ஒன்றிற்கு சுமார் 1 மில்லியன் ரூபா பெறுமதியில் பாரிய கோழி பண்ணை ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

விடத்தற்பளை கிராமத்தை சேர்ந்த தற்போது சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்ற துஷ்யந்தன் நந்தினி தம்பதிகளின் நிதி பங்களிப்பிலியே குறித்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 30 அடி நீளமான கோழி பண்ணை, 500 முட்டைகள் ஒரே நேரத்தில் வைக்கக்கூடிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம் மற்றும் ஒரு தொகுதி கோழிக் குஞ்சுகளும் அதற்கு தேவையான தீவனங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சுமார் ஒரு மில்லியன் ரூபா நிதி பங்களிப்பில் குறித்த வாழ்வாதாரத்துக்கான கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பண்ணை கையளிக்கும் நிகழ்வு நேற்று மாலை இடம் பெற்றது. நிகழ்வில் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் மற்றும் துஷ்யந்தன் நந்தினி தம்பதிகளின் குடும்ப உறுப்பினர்கள் கிராம மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

சத்தம் சந்தடியின்றி ஒரு குடும்பத்திற்கு மில்லியன் ரூபாவில் பூரண வாழ்வாதர உதவியை வழங்கிய துஷ்யந்தன் நந்தினி தம்பதிகளின் செயலை கிராம மக்கள் அனைவரும் வியந்து பாராட்டியுள்ளனர்.





# புலமைப்பரிசில் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு!






முதல் தடவையில் சித்தியடைந்து இந்த ஆண்டு (2024) க.பொ.த உயர்தரப் பரீட்சை கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுவரும் மாணவர் களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப் பனவை 1000 ரூபாவினால் அதிகரிக்க அதிபர் ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக அதிபர் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் அதிபர் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையிலேயே அதிபர் ரணில் விகரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.
இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட, ஆனால் பொருளாதாரச் சிரமங்களை எதிர்நோக்கி வரும் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் அதிபர் ரணில் விக்ரம சிங்க இந்த புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்க தீர்மானித்துள்ளார்.
அதன்படி, அதிபரின் பணிப்புரையின் பிரகாரம், அதிபரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் அதிபர் நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்து கிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், அதிபர் நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், புலமைப்பரிசில் தொகை அதிகரிப் புடன், 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் அதிபர் நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.
மேலும் 2022/2023 ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாண வர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6000 தொகையை வழங்குவதற்காக அதிபர் நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.
இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங் களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புதுப்பிக்கப்படும் தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்வதற்கு , நிதியத்தின் www.facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube சேனலான www.youtube.com/@PresidentsFund I like/follow அல்லது subscribe nra;AkhWk; www.presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையி டுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதிபர் நிதியம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

# ஜனாதிபதியாக அனுரகுமார பதவியேற்றதும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் - வசந்த சமரசிங்க!



நாட்டின் அடுத்த ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க என்பது 100 வீதம் உறுதியானது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுர நிச்சயமாக வெற்றியீட்டுவார் என அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் ஒக்ரோபர் மாதம் 17ம் திகதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது எனவும், இது உறுதி செய்யப்பட்ட விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படும் என வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பளை துர்க்காதேவி வீட்டுத்திட்ட திறப்பு விழா!

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் சமயப் பணிகளுடன் இணைந்ததான சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.
அதன் ஒரு கட்டமாக 4 வீடுகளும் நேற்று (28.01.2024 - ஞாயிறு) காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.
தெல்லிப்பளை துர்க்காதேவி.தேவஸ்தானத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து தெய்வ திருவுருவப் படங்கள் எடுத்துச்செல்லப்பட்டு வீடுகள் திறந்து வைக்கப்பட்டது.
குறித்த வீடுகள் துர்க்காபுரம் மகளிர் இல்ல பெண் பிள்ளைகளுக்கு சீதனமாக வழங்கப்படவுள்ளதுடன் , 2010 ம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இத் திட்டத்தினூடாக ஏற்கனவே ஆலயத்தால் 9 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# கிழக்குப் பல்கலையில் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல்!

28.1.1987 இல் மட்டு கொக்கட்டிச்சோலையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினால் 28.01.1987 ஆம் ஆண்டு சுட்டு படுகொலை செய்யப்பட்ட 83 அப்பாவி தமிழ் உறவுகளின் நினைவேந்தல் கிழக்குப்பல் கலைக்கழக தமிழ் மாணவர்களால் நேற்று (28.01.2024) பொங்கு தமிழ்த் தூபியில் முன்பாக ஈகைச்சுடரேற்றி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைகழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்களினால் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# பாடசாலைகள் தொடங்கும்போது வெடிக்கவுள்ள போராட்டம்!

அடுத்த பாடசாலை தவணை ஆரம்பமானதும் பெற்றோருடன் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை இருபதாயிரம் ரூபாவினால் அதிகரிப்பது, பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு கல்விச் செலவு களை தேவையில்லாமல் சுமத்துவது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத காரணத்தி னால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக தற்போதைய அரசாங்கத்தினால் பாடசாலைகளின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தும் சுமை பெற்றோர்கள் மீது மறைமுகமாக சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.



# ரணிலின் தவறான கோரிக்கைக்கு ஒத்துழைக்க முடியாது!

## சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவிப்பு!



IMF இன் கோரிக்கைக்கு செவி சாய்க்கும் ரணில் விக்கிரமசிங்க அதற்காக தவறான பொருளாதாரக் கொள்கையை மட்டுமே மேற்கொண்டு வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது ஒரு கோரிக்கை முன்வைத்திருக்கிறார். எல்லோரும் இணைந்து இந்த IMF Dila கோரிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டும், எதிர்க்கட்சிகள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் எல்லோரையும் இணைத்து போவது போன்ற ஒரு பாவனையை ஜனாதிபதி முன் வைத்திருக்கின்றார்.

உண்மையாகவே ஐஆகு இனுடைய கோரிக்கைகள் என்று சொன்ன அடிப்படையில் நாட்டு மக்கள் மீது மிகப்பெருமளவிலான வரிச்சுமைகள் சுமத்தப் பட்டிருக்கின்றது. அந்த சுமைகளை தாங்க முடியாத நிலைக்குத்தான் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சகல பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படு கின்றது. 3 நேரம் சாப்பிட்டவர்கள் எல்லாம் ஒரு நேர சாப்பாட்டுக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். எல் லோருக்குமே பல்வேறு பட்ட பிரச்சினைகள் தோன்றி இருக்கின்றது.

இவ்வாறனதொரு சூழ்நிலையில் மக்கள் மத்தியில் பொருளாதார பிரச்சினையை சந்தித்து கொண்டி ருக்கிற ஒரு சூழ் நிலையில் வெறுமனே ஐஆகு னுடைய நிபந்தனையை மாத்திரமே செய்கின்ற கோணத்திலிருந்து அதற்கு எல்லோரும் ஒத்து ழைக்க வேண்டும். அதாவது அவர்கள் எடுக்க கூடிய தவறான முடிவுகளுக்கு ஏனைய கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது முதலாவது தவறான விடயம்.

இரண்டாவதாக அவர் ஒரு ஜனாதிபதி தேர்தலை முகம் கொடுக்க கூடிய சூழ்நிலையில் அவர் சுமக்க கூடிய சகல பிரச்சினைகளையும் ஏனையோரும் சேர்ந்து சுமக்க வேண்டும் என அவர் எதிர் பார்க்கின்றார். ஆகவேதான் அவர் ஏனைய கட்சி களை தம்முடன் இணைந்து இந்த பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கை யினை முன்வைத்திருக்கின்றார்.

உண்மையான விடயம் என்னவென்றால் அரச உத்தியோகத்தர்களுக்கும் சரி, ஏனைய தொழிலா ளர்களாக இருந்தாலும் சரி இருக்கக்கூடிய வாழ்கைச் செலவின் அடிப்படையில் இது வரை அதிகரிக்கப் படவில்லை. வரவு செலவுத்திட்டத்தில் அரச உத்தி யோகத்தர்களின் சம்பள உயர்வு பற்றி குறிப்பிட்டா லும் கூட ஏப்ரல் மாதத்துக்கு பிறகுதான் அது வரும் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மக்கள் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாக்களிப்பார்களா என்ற பாரிய கேள்வி எழுந்திருக் கிறது.

இந்த நிலையில் நிலையில் தனக்கு கிடைக்க கூடிய வாக்குகள் சிதறுப்பட்டு போகாமல் இருக்க வேண் டுமாக இருந்தால் ஒரே விதமான பொருளாதாரக் கொள்கைகளை கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்ற ஒரு நிலையினை அவர் உருவாக்க விரும்புகின்றார்.

சஜித் பிரேமதாசாவோ இல்லாவிட்டால் ஜேவிபியின ரோ ஜனாதிபதியினுடைய அந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்பது அல்ல. இன்றைய நடவடிக்கைகள் ஐஆகு ஐ சில சமயம் திருப்திப்படுத்த லாம். இலங்கையில் இருக்கக் கூடிய ஒட்டுமொத்த மான வாழ்க்கைக்கு அது எந்த விதத்திலும் அது உறுதுணையாக இல்லை. என சுரேஷ் பிரேமச்சந் திரன் மேலும் தெரிவித்துள்ளார்.





கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!

விளம்பர தொடர்புகளுக்கு

+94 777 163990

# ஈழ தேச விடியலுக்கு வித்தான தொப்புள் கொடி உறவுகள்!

## 15ம் ஆண்டு நினைவேந்தல் நாள் இன்று







ஈழத்தில் 2009 ல் சிங்களப் பேரினவாதம் கொத்துக்கொத்தாக ஈழத்தமிழர்களை கொன்று குவித்த போது அதை கண்டு தாங்கமுடியாத துயரத்தில் அப்போரினை நிறுத்தக் கோரியும் அதன் பின்னர் ஈழத்தமிழரின் விடுதலை வேண்டி தங்கள் இன்னுயிரை நெருப்பில் ஆகுதி ஆக்கி வீரச்சாவு அடைந்த தமிழகத் தொப்புள் கொடி உறவுகளுக்கு வீர வணக்கம்

**தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவை**









# நாவற்குழியில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

தமிழ்த் தேசியப் பசுமை ,யக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நாவற்குழியில் கடந்த தினம் இடம் பெற்றுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை ,யக்கத்தின் தலைவர் பொ.

ஐங்கரநேசன் தலைமையில் நாவற்குழி முத்தமிழ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற ,ந்நிகழ்ச் சியில்

கனடா ,லங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத் தின் பிரதிநிதிகள் ந. கேதீஸ்வரசிவம்஢பவ் செ. கிருஸ்ணகோபால்஢பவ்

கு. கல்யாணசுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை ,யக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டி அவர்களிடையே சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக஢பவ் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்பாளர் களாக்கும்

நோக்குடன் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகிறது. ,தன் தொடராகவே நாவற்குழியில் ,ந்நிகழ்ச்சி ,டம் பெற்றுள்ளது. ,ந்நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கை யான

மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டி ருந்தார்கள். பங்குபற்றிய மாணவர்கள் அனைவ ருக்கும்

கனடா ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப் பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.














அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk


**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME